மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| அ.வ.எண். | 80/2020 | சாட்சி | வா.சா.1 |
|---|---|---|---|
| பெயர் | காந்தாமணி | நாள் | 16.10.2024 |
| கணவர் பெயர் | தங்கமணி | | |

**பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:–**

1) என் கணவர் தங்கமணி மின் வாரியத்தில் பணிபுரிகிறார் என்றால், முன்பு பணிபுரிந்தார். தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டார். என் மாமியார் பெயர் குருவாயி என்றால், சரிதான். என் மாமனார் பெயர் பொன்னுசாமி என்றால், சரிதான். மேற்படி பொன்னுசாமி–குருவாயி தம்பதியினருக்கு மொத்தம் எத்தனை வாரிசுகள் என்றால், ஆறு வாரிசுகள். மேற்படி வாரிசுகளில் 1ம் பிரதிவாதி சரஸ்வதிதான் மூத்த வாரிசு என்றால், சரிதான்.

2) என் கணவர் சிறு வயதாக இருக்கும் பொழுதே என் மாமனார் பொன்னுசாமி இறந்துவிட்டார் என்றால், சரிதான். என் மாமனார் இறந்த சமயத்தில் என் மாமியாரும், அவரது குழந்தைகளும் ரெட்டியூரில் வசித்து வந்தனர் என்றால், சரியல்ல. புதுசின்னக்காவூரில் வசித்து வந்தனர். 1ம் பிரதிவாதி சரஸ்வதியை எந்த ஊருக்கு திருமணம் செய்து கொடுத்தனர் என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. 1ம் பிரதிவாதியின் கணவர் பெயர் பழனியப்பன் என்றாலும், அவர் ஜோதிடம் பார்த்து வந்தார் என்றாலும், சரிதான்.

3) மேற்படி 1ம் பிரதிவாதியின் கணவர் பழனியப்பன் சுமார் 20 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார் என்றால், சுமார் 25 வருடங்கள் இருக்கும். மேற்படி 1ம் பிரதிவாதிக்கு எத்தனை வாரிசுகள் என்றால், மூன்று பெண் வாரிசுகளும், இரண்டு ஆண் வாரிசுகளும் உள்ளனர். மேற்படி ஆண் வாரிசுகள் தான் இவ்வழக்கில் 2, 3 பிரதிவாதிகள் என்றால், சரிதான்.

4) என் திருமணத்திற்கு முன்பு என் கணவர் எங்கு வசித்து வந்தார். என்ன தொழில் செய்து வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. குழந்தை கவுண்டர் என்பவரை எனக்கு தெரியுமா என்றால், தெரியும். அவர் என் பெரிய மாமனார். வீராசாமி என்பவர் யார் என்றால், அவர் என் கணவரின் அண்ணன் ஆவார்.

5) மேற்படி குழந்தை கவுண்டருக்கு விவசாய நிலங்கள் உள்ளது என்றால், சரிதான். என் மாமியார் மற்றும் மாமனாருக்கு சொந்தமான நிலத்தை அனல் மின் நிலையம் கட்டுவதற்காக கையகப்படுத்தினார்களா என்றால், ஆமாம். புதுக்காட்டிலுள்ள நிலத்தை கையகப்படுத்தினார்கள். மேற்படி நிலத்தை கையகப்படுத்தியதற்கு ஈடாகத்தான் என் கணவருக்கு மின் வாரியத்தில் வேலை கொடுத்தார்கள் என்றால், சரிதான்.

(பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.